NOVEMBER 2025 **62632/345C5C/344C5C/346C5C/347C5C/348C5C/351C5C/318C5C**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Define Income.

   வருவாய் வரையறு.

2. Who is a person?

   நபர் என்பவர் யார்?

3. Mention any two exempted allowances from salary.

   சம்பளத்தில் விலக்கு அளிக்கப்பட்ட படிகள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

4. Expand the term AOP and BOI.

   AOP மற்றும் BOI ஆகியவற்றை விரிவாக்கம் செய்க.

5. What is Gratuity?

   பணிக் கொடை என்றால் என்ன?

6. State the meaning of perquisites.

   சலுகைகள் என்பதன் பொருள் கூறுக.

7. What are the deductions shown in u/s 16?

   பிரிவு 16ன் கீழ் காண்பிக்கப்படும் கழிவுகள் யாது?

8. What is Unrealized rent?

   பெறப்படாத வாடகை என்றால் என்ன?

9. What is Fair Rental Value?

   நியாயமான வாடகை மதிப்பு என்றால் என்ன?

10. State any two disallowed incomes in business.

    வணிகத்தில் அனுமதிக்கப்படாத வருவாய்கள் ஏதேனும் இரண்டினைக் கூறுக.

11. What is Business?

வணிகம் என்றால் என்ன?

12. Write a note on Section 54D.

பிரிவு 54D பற்றி குறிப்பு எழுதுக.

PART B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. Explain the characteristics of tax system.

வரி முறையின் பண்புகளை விளக்குக.

14. Mr. Kannan an Indian citizens, goes abroad on 1.4.2016 for the first time. He returns to India on 15.02.2023. During the previous year 2024–25 he was in India only for 185 days. Find his residential status for the assessment year 2025 – 26.

திரு கண்ணன் என்பவர் இந்திய குடியுரிமை பெற்றவர் இவர் 1.4.2016ல் முதன் முறையாக வெளிநாடு சென்றார். அவர் 15.02.2023 இல் இந்தியா திரும்பினார். முந்தைய ஆண்டு 2024-25 ல் அவர் இந்தியாவில் 185 நாட்கள் மட்டுமே வசித்தார், அவரின் குடியுரிமை நிலையை மதிப்பீடு ஆண்டு 2025-26 க்கு காண்க.

15. Mr. A resident of Delhi receives Rs. 72,000 per annum as salary. Rs. 48,000 per annum as DA (which does not form part of salary) and 2% commission on turnover achieved (turnover achieved Rs.1,00,000) During the previous year he receives Rs. 18,000 per annum towards HRA for which he pays Rs. 4,000 per month as rent. Calculate taxable HRA.

திரு A என்பவர் டெல்லியில் வசிக்கிறார் அவர் ஆண்டு சம்பளமாக ரூ.72,000 ம் அகவிலைப்படியாக ரூ.48,000 (சம்பளத்தின் பகுதியாக சேராதது) பெறுகிறார். மேலும் விற்பனை மீது 2% கழிவும் பெறுகிறார் (அவர் சாதித்த விற்பனைத் தொகை ரூ.1,00,000) முந்தைய ஆண்டில் அவர் பெற்ற வீட்டு வாடகைப்படி 18,000 ஆண்டுக்கு, மேலும் அவர் செலுத்திய வாடகை மாதத்திற்கு ரூ.4,000. வரிக்குட்பட்ட வீட்டு வாடகை படியைக் கணக்கிடுக.

16. Write a note on exempted house property income.

விலக்களிக்கப்பட்ட வீட்டுச் சொத்து வருவாய் பற்றி குறிப்பு எழுதுக.

17. Compute income from house property of Mr. Z from the following information

Rent received per annum Rs. 92,000

Municipal value per annum Rs. 87,000

Municipal taxes is 10% of municipal value

Vacancy period – 2 months

பின்வரும் தகவல்களைக் கொண்டு திரு Z என்பவரின் வீட்டுச் சொத்து வருவாயைக் கணக்கிடுக.

பெற்ற வாடகை ஆண்டுக்கு ரூ. 92,000

நகராட்சி வாடகை மதிப்பு ஆண்டுக்கு ரூ. 87,000

நகராட்சி வரி 10% நகராட்சி மதிப்பில்

காலியாக இருந்த காலம் - 2 மாதங்கள்

18. Mr. X gives you the following particulars from his accounts for the year ending 31.3.2025.Following items have been debited to profit and loss account

	Rs.
Net profit as P and L account	3,00,000
Contribution to unrecognized PF	20,000
Provision for Income tax and wealth tax	10,000
Advertisement	10,000
Provision for excise duty	5,000
Interest on late payment of sales tax	1,000
Office Expenses	3,000

Compute his business income.

திரு X என்பவர் பின்வரும் விபரங்களை தனது 31.3.2025 நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய கணக்குகளிலிருந்து அளித்துள்ளார். பின்வரும் இனங்கள் இலாப நட்டக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ளது.

இலாப நட்ட கணக்கின்படி நிகர லாபம் ரூ. 3,00,000

அங்கீகரிக்கப்பட்ட சேம நல நிதிக்குரிய பங்களிப்பு ரூ.20,000

வருமானவரி மற்றும் சொத்து வரிக்கான ஒதுக்கு ரூ.10,000

விளம்பரம் ரூ.10,000

கலால் வரிக்கான ஒதுக்கு ரூ.5,000

விற்பனை வரி தாமதமாக செலுத்தியதால் ஏற்பட்ட வட்டி ரூ.1,000

அலுவலகச் செலவுகள் ரூ.3,000

அவரின் வணிக வருவாயினைக் கணக்கிடுக.

19. How do you compute of Gross Annual Value of self-occupied house property?

சுய உபயோகத்திற்கான வீட்டுச் சொத்தின் மொத்த ஆண்டு மதிப்பினை நீவிர் எவ்வாறு கணக்கிடுவாய்?

PART C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Discuss historical background of Income tax.

வருமான வரியின் வரலாற்றுப் பின்னனி குறித்து விவாதி.

21. Compute Total Gross Income of Mr. X if he is

(a) Resident,

(b) Not ordinarily resident,

(c) Nonresident.

(i) Salary received in India Rs. 60,000

(ii) Income earned in India, received in London Rs. 7,000

(iii) Income from business in Iran, but controlled and managed from India Rs. 13,000

(iv) Income from house property in Nepal Rs. 5,000

(v) Income from 2023-2024 in USA now brought to India Rs. 10,000

திரு X என்பவரின் மொத்த வருவாயை பின்வரும் சூழலில் கணக்கிடுக

(அ) குடியிருப்பாளர்

(ஆ) சாதாரண குடியிருப்பவர் அற்றவர்

(இ) குடியிருப்பாளர் அற்றவர்

(i) இந்தியாவில் பெற்ற சம்பளம் ரூ. 60,000

(ii) இந்தியாவில் ஈட்டப்பட்டவருவாய் ரூ.7,000 லண்டனில் பெறப்பட்டது.

(iii) ஈரானில் உள்ள வணிகம் மூலம் ஈட்டியது ரூ. 13,000 இந்த வணிகம் இந்தியாவிலிருந்து கட்டுப்படுத்தப்பட்டு மற்றும் மேலாண்மை செய்யப்பட்டது.

(iv) நேபாளில் உள்ள வீட்டு சொத்து வருவாய் ரூ. 5,000

(v) USA யிலிருந்து 2023-2024 வருவாய் ரூ.10,000 தற்போது இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டது.

22. From the following calculate Income from salary of Mr. Z working in Vellore in a private company.

	Rs.
Basic salary	12,500 p.m
DA	8,000 p.m
CCA	1,200 p.m
Special allowance	600 p.m
Servant allowance	250 p.m
Deputation allowance	100 p.m
Overtime allowance	650 p.m
Fixed medical allowance	50 p.m
HRA	4,000 p.m
Tribal area allowance	400 p.m (actual amount spent Rs. 200 p.m)
Conveyance allowance	6,000 p.a (actual amount spent Rs. 4,800)

20% of total DA does not enter into service benefits. He pays a rent of Rs. 2,150 p.m for the house where he resides. Apart from the above mentioned he was paid Rs. 3,400 as bonus. He gets Rs. 250 p.m towards EA.

திரு Z என்பவர் வேலூரில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரின் சம்பளம் மூலம் பெற்ற வருவாயினை பின்வரும் தகவல்களைக் கொண்டு கணக்கிடுக.

அடிப்படைச் சம்பளம் மாதத்திற்கு ரூ.12,500

அகவிலைப்படி மாதத்திற்கு ரூ.8,000

நகர ஈட்டுப்படி மாதத்திற்கு ரூ.1,200

சிறப்புப் படி மாதத்திற்கு ரூ.600

பணியாளர் படி மாதத்திற்கு ரூ.250

பிரதிநிதித்துவ படி மாதத்திற்கு ரூ.100

கூடுதல் நேர படி மாதத்திற்கு ரூ.650

நிலையான மருத்துவ படி மாதத்திற்கு ரூ.50

வீட்டு வாடகைப் படி மாதத்திற்கு ரூ.4,000

பழங்குடி பகுதி படி மாதத்திற்கு ரூ.400 (உண்மையாக செலவழித்தது ரூ.200 மாதத்திற்கு)

போக்குவரத்துப்படி ஆண்டுக்கு ரூ.6,000 (உண்மையான செலவழித்தது ரூ.4,800)

மொத்த அகவிலைப்படியில் 20% அவரது பணிக்கால நன்மையில் சேராது. அவர் வசிக்கும் வீட்டிற்கு மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.2,150 செலுத்துகிறார். இதைத் தவிர அவருக்கு அளிக்கப்படும் ஊக்கத் தொகை ரூ.3,400 அவர் பெறும் பொழுதுபோக்கு படி மாதத்திற்கு ரூ. 250.

23. Mr.B has let out at house property for a monthly rent of Rs.20,000. It municipal valuation is Rs.2,50,000 p.a. Its fair rental value is Rs.2,40,000 p.a. It has been let out from 1st October 1993. Mr. B paid Rs. 10,000 as municipal taxes. Municipal taxes paid by the tenant are Rs.5,000. Rs.3,000 Municipal taxes are due but not paid. Out of Rs.10,000 paid by B Rs.2,000 relates to subsequent two years. Find out the net annual value of the house property for the Assessment year 2025-26.

திரு B என்பவர் தனது வீட்டின் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000 வீதம் வாடகைக்கு அளித்துள்ளார். அதன் நகராட்சி மதிப்பு ஆண்டுக்கு ரூ.2,50,000. அதன் நியாயமான வாடகை மதிப்பு ஆண்டுக்கு ரூ.2,40,000. அந்த வீடு 1.10.1993 முதல் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. திரு B செலுத்திய நகராட்சி வரி ரூ.10,000. அவர் வீட்டில் குடியிருக்கும் நபர் செலுத்திய நகராட்சி வரி ரூ.5,000, நிலுவையில் உள்ள நகராட்சி வரி ரூ.3,000 இன்னும் செலுத்தப்படாமல் உள்ளது. இதைத் தவிர B செலுத்திய ரூ.10,000 ல் தொடர்ந்து வருகின்ற இரண்டு வருடங்களுக்காக ரூ.2,000 செலுத்தப்பட்டுள்ளது வீட்டுச் சொத்துக்கு உரிய நிகர ஆண்டு மதிப்பினை மதிப்பீட்டு ஆண்டு 2025-26க்கு கணக்கிடுக.

24. From the following statement, compute the income from profession of Dr. S.K. Kannan.

Payments	Rs.	Receipts	Rs.
To Dispensary rent	36,000	By Visiting fees	45,000
To Electricity and water charges	6,000	By Consultation fees	1,25,000
To Telephone expenses	6,000	By Sales of medicines	72,000
To Salary to nurse and compounder	36,000	By Dividends	5,000
To Depn. On surgical equipment	6,000		
To Purchase of medicines	36,000		
To Depn. On X ray machine	4,000		
To Income tax	5,500		
To Donation	4,000		
To Motor car expenses	9,600		
To Depn. on car	4,800		
To Net Income	93,100		
	2,47,000		2,47,000

(a) Electricity and water charges include domestic bill of Rs. 2,500

(b) Half of motor car expenses are for professional use.

(c) Telephone expenses include 40% for personal use.

(d) Opening stock of medicines was Rs. 6,000 and closing stock was Rs. 4,000

பின்வரும் அறிக்கையினைக் கொண்டு மருத்துவர் S.K. கண்ணன் என்பவரின் தொழில் வருவாயைக் கணக்கிடுக.

செலுத்துதல்கள்	ரூ.	பெறுதல்	ரூ.
மருந்தக வாடகை	36,000	வருகை கட்டணம்	45,000
மின்சாரம் மற்றும் தண்ணீர் செலவுகள்	6,000	ஆலோசனைக்	
தொலைப்பேசி கட்டணம்	6,000	கட்டணம்	1,25,000
நர்ஸ் மற்றும் உதவியாளர் சம்பளம்	36,000	மருந்துகள் விற்பனை	72,000
அறுவை சிகிச்சை கருவிகள் மீதான தேய்மானம்	6,000	பங்காதாயம்	5,000
மருந்துகள் கொள்முதல்	36,000		
எக்ஸ்ரே இயந்திர தேய்மானம்	4,000		
வருமான வரி	5,500		
நன்கொடை	4,000		
மோட்டார் கார் செலவுகள்	9,600		
கார் தேய்மானம்	4,800		
நிகர வருவாய்	93,100		
	2,47,000		2,47,000

(அ) மின்சார மற்றும் தண்ணீர் செலவுகளில் ரூ. 2,500 வீட்டுக்குரிய கட்டணம் சேர்ந்துள்ளது.

(ஆ) கார் செலவில் பாதி தொழில் சார்ந்தது.

(இ) தொலைபேசி கட்டணத்தில் 40% தனிப்பட்ட பயன்பாட்டிற்குரியது

(ஈ) மருந்துகளின் தொடக்க இருப்பு ரூ. 6,000 மற்றும் மருந்துகளின் இறுதி இருப்பு ரு. 4,000

———————